DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**MCOP.No.655 /2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | P.W.1 | | | |
| Name | : | திருமதி.K.விசாலாட்சி | Calling | : | |
| Father / Husband Name | : | திரு.கிருஷ்ணமூர்த்தி | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 03.12.2024.

முதல் விசாரணை:-

நான் இம்மனு முதல் மனுதாரர். மோட்டார் வாகன விபத்தில் என் கணவர் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார். நானும், என்னுடைய மகள் மற்றும் இரண்டு மகன்களான 1 முதல் 4 மனுதாரார்கள் கிருஷ்ணமூர்த்தியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்து, அது சம்மந்தமாக என்னுடை முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதனை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**ம.சா.ஆ.1** - முதல் தகவல் அறிக்கை நகல்

**ம.சா.ஆ.2** - கிருஷ்ணமூர்த்தியின் விபத்து பதிவேடு நகல்

**ம.சா.ஆ.3** - கிருஷ்ணமூர்த்தியின் சடலக்கூறாய்வு அறிக்கை நகல்

**ம.சா.ஆ.4** - கிருஷ்ணமூர்த்தியின் இறப்பு சான்று நகல்

**ம.சா.ஆ.5** - எதிர்மனுதாரரின் வாகன பதிவுச்சான்று நகல்

**ம.சா.ஆ.6** - எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்

**ம.சா.ஆ.7** - மனுதாரர்களின் ஆதார் அட்டைகள் (எண்ணிக்கை-4)

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என் கணவருக்கு சொந்தமான வாகனம் ஆகும். அதற்கு உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்

கணவருடைய இருசக்கர வாகனத்தின் இன்சூரன்ஸ் இருக்கிறதா என்றால் சாட்சி அதனை புதுப்பிக்க வேண்டுமென்று என் கணவர் சொல்லி வந்தார் என்று பதில் அளிக்கிறார். என் கணவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்ததா?, அதனை நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேனா என்றால் சாட்சி இல்லை, புதுப்பிக்க வேண்டுமென்று என் கணவர் சொல்லி வந்தார். என் கணவர் பால் வியாபாரம் செய்து வருமானம் வந்தது என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி இறந்துவிட்டார். என் கணவரின் முதல் மனைவி இறந்த பிறகு தான் என்னை இரண்டாவதாக என் கணவர் திருமணம் செய்து கொண்டார். அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு முதல் மனைவி மூலமாக ஒரு மகள் இருக்கிறார், அவர் தான் இந்த மனுவில் 2-ம் மனுதாரர் சந்தியா ஆவார். சந்தியாவிற்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனக்கு இரண்டு மகன்கள், அவர்களை இம்மனுவில் 3 மற்றும் 4ம் மனுதாரர்கள் ஆவார்கள். நான் என் கணவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் பால் வியாபாரத்திற்காக புதுக்கோட்டைக்கு வழக்கமான வந்து செல்வார் என்றால் சரிதான். காலை 8.30 மணிபோல் விபத்து குறித்து தெரியவந்தது. நான் தான் புகார் கொடுத்தேன். என் கணவர் தலைக்கவசம் அணிந்து வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்பது பற்றி முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சாட்சி சொல்லவில்லை, நான் தான் என் கணவர் புறப்பட்டு செல்லும்போது தலைக்கவசத்தை எடுத்து அவரது கையில் கொடுத்தேன் என்று பதில் அளிக்கிறார். என் கணவரின் வயது மற்றும் வருமானத்தை காண்பிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பேருந்து தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை நோக்கி வரும்போது அந்த சாலை சற்று வளைந்த சாலை என்ற நிலையில் என் கணவர் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டிச்சென்று அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், பேருந்து ஓட்டுநர் விபத்திற்கு காரணம் அல்ல என்றாலும் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், அதற்கு அடிப்படை ஆதாரம் இல்லை என்றாலும் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்ட நிறுவனத்தினையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர்தான் காரணம் என்றாலும், பேருந்து ஓட்டுநர் காரணம் இல்லை என்றாலும் சரியல்ல.

***Taken down by me in open court***
***read over to the witnesses and***
***admitted by him/her to be correct.***

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***